2010 ஏப்ரல் 27]

உயர்த்தக்கூடிய முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருக்கிறோம். அனைவரும் இடைநிலைக் கல்வித் திட்டத்தை முறையான வகையிலே பயன்படுத்திக்கொண்டு, மிக அதிகமான பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய ஒரு வாய்ப்பை இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய தமிழகம்தான் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை அன்றைக்கு அந்தக் கூட்டத்திலே வலியுறுத்தி மைய அரசாங்கத்திலிருந்து அனுமதியை நாம் பெற்றிருக்கிறோம். எனவே, முதற்கட்டமாக 200 பள்ளிகள் இந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. வரக்கூடிய காலங்களில் அவர் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளி, அந்தத் தேவைகள் அங்கே இருக்குமென்று சொன்னால், அதைப் பட்டியலிலே இணைத்துக்கொள்வதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

110—

தொழிற்பேட்டை

***61374—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

[2010 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் சட்டப் பேரவைத் தொகுதி மாவட்டத்தினுடைய மையப் பகுதியிலுள்ள தொகுதி. ஏராளமான கிராமங்கள் உள்ள தொகுதி. இதுவரை அந்தப் பகுதியில் எந்தவிதமான தொழிற்பேட்டையும் கிடையாது. அரசுத் தொழிற்சாலைகளோ, தனியார் தொழிற்சாலைகளோ கிடையாது. படித்த இளைஞர்களில் அதிகமானவர்கள் அங்கே வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதற்கு முன்னால் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக இயங்கி வந்த 2 தொழிற்கூடங்கள் கடந்த ஆட்சியில் மூடப்பட்டு, அந்த இயந்திரங்களெல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக உற்பத்தியாகின்ற மூலப் பொருட்கள், கயிறு, வாழைக் கயிறு, அதாவது வாழை நார், தேங்காய் நார் போன்ற மூலப் பொருட்களும் என்னுடைய தொகுதியில் அதிகமாகக் கிடைக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கருத்திற்கொண்டு என்னுடைய பின்தங்கிய தொகுதியில் தங்களுடைய துறையின் மூலமாக ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருவார்களேயானால், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அந்தப் பகுதியின் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து அமைச்சர் அவர்கள் அதை அமைத்துத் தர பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் துறையைப் பொறுத்தமட்டில் எங்குமே தொழிற்பேட்டைகள் அமைப்பதில்லை. இத்துறையின் நோக்கமே கிராமப்புறங்களில் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு

2010 ஏப்ரல் 27]

வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். அதன் அடிப்படையில் குறைந்தபட்சம் 25 உறுப்பினர்கள் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி கதர்த் துறையில் பதிவு செய்து, தொழில் ஆரம்பிக்கத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கித் தர வேண்டும்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 17 இயங்கி வருகின்றன. அதில் புதுக்கோட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், இரணியல் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், ஆசாரிப்பள்ளம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், ராஜமங்கலம் சுண்ணாம்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மணக்குடி சுண்ணாம்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், சுசீந்திரம் கைக் குத்தல் அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், திருவட்டாறு தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கருங்கல், தச்சு, கொல்லு கூட்டுறவுச் சங்கம், சூரங்குடி பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கம், கொல்வேல் நார் கூட்டுறவுச் சங்கம், இடைக்கோடு நார் கூட்டுறவுச் சங்கம், முல்லை பூங்கனி மூங்கில் மற்றும் பிரம்பு கூட்டுறவுச் சங்கம், தாலக்குடி மட்பாண்டம் கூட்டுறவுச் சங்கம், சுங்காங்கடை கூட்டுறவுச் சங்கம், எரச்சகுளம் ஆயுர்வேதிக் கூட்டுறவுச் சங்கம், குமரக்குடி இரப்பர் பேண்ட் கூட்டுறவுச் சங்கம் ஆகிய 17 சங்கங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வருகின்றன.

மேலும் தமிழ்நாட்டில், தற்போது கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்களைச் செய்வதற்குப் பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25 முதல் 35 வரையில் மானியத்துடன்கூடிய கடன் உதவி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அதிகபட்சமாக ஒரு நபருக்கு ரூ.8 இலட்சம் வரையில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 141 பயனாளிகளுக்கு 425.67 இலட்சம் கடன் வழங்கப்பட்டு, 123.07 இலட்சம் மானியம்

வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உங்களுடைய தொகுதியில் மட்டும் 22 பயனாளிகளுக்கு ரூ.55.51 இலட்சம் கடன் வழங்கப்பட்டு, ரூ.16.87 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள், பத்மநாபபுரம் தொகுதியில் தொழில் புரிய விரும்பும் அந்தக் குறிப்பிட்ட நார் தொழில் செய்ய விரும்புவோர், தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பின் அந்தப் பகுதியில் கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அதனை கதர் கிராமத் தொழில் துறையின்கீழ் பதிவு செய்து, தொழில் தொடங்கலாம். அதேபோல், கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் செய்ய விரும்புவோர் மானியத்துடன்கூடிய கடன் பெற்று, தொழில் தொடங்க உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில் துறை, நாகர்கோவில் அவர்களை நேரில் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுடைய நிலைகளை எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில், மண்பாண்டத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இயங்கிக் கொண்டிருப்பது உண்மைதான். ஆனால், அதனுடைய மூலப்பொருளாகிய மண் கிடைக்காத காரணத்தினால், அந்தத் தொழில் மிகவும் நலிவடைந்து, மண்பாண்டம் செய்கின்ற தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, பல்வேறு சூழல்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, தொழில் முனைவது என்பது, என்னுடைய மாவட்டத்தின் நிலைமைக்கு மிகவும் கடினமாக இருக்கின்ற ஒரு காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறு பரிசீலினை செய்து, என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, உங்கள் தொகுதியில் இப்போது தக்கலையில் கதர் அங்காடி ஒன்று உள்ளது. கூட்டுமழையில் கிராமின் நூற்பு நிலையம் ஒன்று உள்ளது. தக்கலையில் தேனீ பண்ணை உள்ளது. கயிறு திரிக்கும் தொழிலைச் செய்ய விரும்புவோருக்கு, எங்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அந்தத் தொழிலைத் தொடங்கினால் வேண்டிய அனைத்து உதவிகளையும் துறைமூலம் செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரில் உள்ள மலைப் பகுதி இலவம் பஞ்சு அதிகம் விளையக்கூடிய இடம். இலவம் பஞ்சை அரசே கொள்முதல் செய்து, அங்கு தொழிற்பேட்டை அமைத்து, தரமான மெத்தை மற்றும் தலையணைகளைத் தயார் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் கதர்த் துறை மூலமாக சிறந்த இலவம் பஞ்சு மெத்தைகள் தயாரிக்கப்பட்டு, கதர் அங்காடிகளில் விற்கப்படுகின்றன. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன் அவர்களின் தொகுதியிலிருந்துதான் அந்த பஞ்சுகள் வாங்கப்படுகின்றன. எனவே, தனியாக அதை அமைக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]